
# 1 எனது நண்பர்கள்




இவர்கள் என்ன பேசுகிறார்கள்? கற்பனை செய்வோம்; கலந்துரையாடுவோம்; பேசுவோம்; உரையாடிக் காட்டுவோம்.

## செயற்பாடு 1

1

**ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

■ ஜனனி    ● சிவா    ▲ கீதா

▲ வணக்கம் சிவா.

● வணக்கம். வணக்கம். எப்படிச் சுகம்?

▲ நல்ல சுகம்.

● கீதா........
உங்கள் சுகம் எப்படி?

▲ நானும் நல்ல சுகம்.

● இவர் யார்?

▲ இவர் என் புதிய நண்பி ஜனனி.

▲ ஜனனி, இவர் என் நண்பன் சிவா.

● வணக்கம் ஜனனி.

■ வணக்கம் சிவா.

● உங்கள் பழைய பாடசாலையின் பெயர் என்ன?

■ ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம்.

● உங்கள் ஊர் எது?

■ எனது ஊர் ஹற்றன். உங்கள் ஊர் எது?

● எனது ஊர் தெஹிவளை.

■ உங்களைச் சந்தித்தது சந்தோஷம்.

● எனக்கும் சந்தோஷம்.

▲ வாருங்கள் வகுப்புக்குப் போவோம்.

●■ சரி, போவோம்.

## சொல் அறிமுகம்

1. **புதிய நண்பி** - අලුත් මිතුරිය
2. **பழைய பாடசாலை** - පරණ පාසල
3. **சந்தித்தது** - හමුවීම
4. **சந்தோஷம்** - සතුටුයි
5. **போவோம்** - යමු
6. **இவருடைய** - මෙයාගේ
7. **இவரின்** - මෙයාගේ
8. **இவருக்கு** - මෙයාට

## செயற்பாடு 2

**உரையாடலைச் செவிமடுப்போம்; சரி (✓) பிழை (×) இடுவோம்.**





1. புதிய நண்பியின் பெயர் ஜனனி. ☐
2. ஜனனியின் பழைய பாடசாலை ஸ்ரீ விக்கிரமசிங்க வித்தியாலயம். ☐
3. சிவாவின் ஊர் ஹற்றன். ☐


## செயற்பாடு 3


பாத்திரமேற்று வாசிப்போம்.


## செயற்பாடு 4


**பின்வரும் எழுத்துக்களை அவதானிப்போம்.**




















## செயற்பாடு 5

உரையாடலில் உள்ள புதிய எழுத்துக்களை இனங்காண்போம். பயன்படுத்துவோம்.

## செயற்பாடு 6

2

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**



இவர் சரஸ்வதி.



இது ஜம்பு.



இவர் ஹனுமான்.



இவர் ஸ்ரீ விக்கிரமராஜசிங்க.



இது ஹிமாலயம்.



இவர் லக்ஷ்மி.

## செயற்பாடு 7

**படங்களுக்குப் பொருத்தமான சொல்லை வாசிப்போம்; இணைப்போம்.**



ஜன்னல்



லக்ஷ்மி



புஷ்பம்



ஹிமாலயம்



ஜம்பு



சரஸ்வதி



ஸ்ரீ லங்கா

## செயற்பாடு 8

**பின்வரும் இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. இது அழகான பு ____ பம்.



2. இலங்கையின் தலை நகரம். ____ யவர்த்தனபுரம்.



3. இது சின்ன ____ ன்னல்.



4. இந்த ஐ ____ பழம் சுவையானது.



## செயற்பாடு 9

3

**ஆசிரியரின் உதவியுடன் இடப் பெயர்களைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

- ஹப்புத்தளை
- ஜாவத்தை
- ஹற்றன்
- ஹோமாகம
- ஹம்பாந்தோட்டை
- ஜாஎல
- தெஹிவளை
- கம்பஹா
- கட்டுகஸ்தோட்டை
- மஹரகம

## செயற்பாடு 10

**வகுப்பு நண்பர்களின் பெயர்களையும் ஊர்களையும் கேட்டு அறிவோம்; அவற்றில் ஸ,ஷ,ஹ,ஜ,ஸ்ரீ எழுத்துக்கள் வரும் பெயர்களை அட்டவணைப்படுத்துவோம்.**

| நண்பர்களின் பெயர்கள் | நண்பர்களின் ஊர்ப் பெயர்கள் |
|---|---|
| | |

## செயற்பாடு 11

**படத்தை அவதானிப்போம்; பந்தியை வாசிப்போம்.**



இவர் என் புதிய நண்பி. இவரின் பெயர் ஜனனி. இவரின் ஊர் ஹற்றன். இவருடைய பழைய பாடசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம். இவருக்குப் பன்னிரண்டு வயது. இவரின் பொழுதுபோக்கு ஹொக்கி விளையாடுதல். இவருக்கு ஐஸ்பழம் சாப்பிட விருப்பம்.


## செயற்பாடு 12

**பந்தியை வாசிப்போம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. ____________ ஜனனி.
2. ____________ ஊர் ஹற்றன்.
3. ____________ பழைய பாடசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம்.
4. ____________ பன்னிரண்டு வயது.
5. ____________ பொழுதுபோக்கு ஹொக்கி விளையாடுதல்.
6. ____________ ஐஸ்பழம் சாப்பிட விருப்பம்.


## செயற்பாடு 13

**உதாரணத்தை அவதானிப்போம்; வாசிப்போம்;**
**ஜனனியைப் பற்றியும், சிவாவைப் பற்றியும் எழுதுவோம்.**




பெயர் : கீதா
ஊர் : யாழ்ப்பாணம்
வயது : 12

இவர் என் நண்பி.
இவருடைய பெயர் கீதா.
இவரின் பெயர் கீதா.
இவருடைய ஊர் யாழ்ப்பாணம்.
இவருக்கு 12 வயது.



பெயர் : சிவா
ஊர் : தெஹிவளை
வயது : 12

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________



பெயர் : ஜனனி
ஊர் : ஹற்றன்
வயது : 12

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

## செயற்பாடு 14

நண்பருடன் இணைவோம்; நண்பனை / நண்பியைப் பற்றிச் சொல்லுவோம்; எழுதுவோம்.

## செயற்பாடு 15

**பெற்றோரை அறிமுகம் செய்வோம்.**

| | அம்மா | அப்பா |
|---|---|---|
| 1. பெயர் | | |
| 2. ஊர் | | |
| 3. வயது | | |
| 4. பொழுது போக்கு | | |
| 5.விருப்பமான உணவு | | |

## செயற்பாடு 16

விருப்பமான உறவினரை வரைவோம்; அவரைப் பற்றி 5 வசனங்கள் எழுதுவோம்.

1. ..............................................................................................
2. ..............................................................................................
3. ..............................................................................................
4. ..............................................................................................
5. ..............................................................................................



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



க

ක ග හ

4

| க - ක | க - ග | க - හ |
|---|---|---|
| கண் | உங்கள் | சுகம் |
| காது | இலங்கை | அழகான |
| அக்கா | சிங்கம் | தாகம் |
| குடை | எங்கே ? | மகன் |
| தக்காளி | அங்கே | புத்தகம் |
| வணக்கம் | தங்கை | முகம் |
| எனக்கு | | |



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. ஸ,ஷ,ஹ,ஜ,ஸ்ரீ උච්චාරණය කිරීම | | | |
| 2. ஸ,ஷ,ஹ,ஜ,ஸ்ரீ අක්ෂර ලිවීම | | | |
| 3. இவருடைய, இவரின், இவருக்கு වැනි පද අවස්ථාවට අනුව භාවිත කිරීම | | | |
| 4. මිතුරෙකු ගැන හඳුන්වා දීම | | | |
| 5. නෑදෑයින් ගැන හඳුන්වා දීම | | | |
| 6. க අක්ෂරයේ ක,ග,හ යන උච්චාරණ වෙනස්කම හඳුනා ගැනීම | | | |